**CHAPTER XXV, CODE OF CRIMINAL PROCEDURE**

**IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,**
**THIRUVALLUR AT POONAMALLEE**

SESSIONS CASE NO.14/2020

Deposition of Witness for prosecution: P.W.

solemnly by S. Ramanujam, Translator

Name : Arulmani Caste:

Father's Name : Selvaraj Calling :

Village : Religion:

Taluk : Age:

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on: 13.06.2022

முதல் விசாரணை:-

நான் பூந்தமல்லி, பாரிவாக்கம், பால்வாடி தெரு நம்பர் 999ல் குடியிருக்கிறேன், நான் கார் ஓட்டுநராக வேலை செய்கிறேன். இறந்த மோட்டு என்ற நபரை எனக்கு தெரியும். அவர் ஆட்டோ ஓட்டுநர். ஆஜர் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். 19.11.2018ம் தேதி மதியம் சுமார் 01.30 மணி இருக்கும், மோட்டு என்னை போன் செய்து பாரிவாக்கம் கங்கையம்மன் கோயில் குளத்தருகே வரச் சொன்னார். நான் அங்கு சென்றேன். நான் போன பின் சுனில், வசந்த் மற்றும் சூரியதேவன் ஆகியோர் வந்தார்கள். அப்போது ஆஜர் எதிரிகள் நடந்து வந்தார்கள். எங்கிருந்து வந்தார்கள் என்று தெரியாது. ஆனால் நாங்கள் இருந்த இடத்திற்கு வந்தார்கள். நாங்கள் அங்கு ஒன்றாக அமர்ந்து மது அருந்திக் கொண்டிருந்தோம். அப்போது பூபாலன் உங்களுடன் இருப்பவர்கள் யாரோ ஒருவர் அவர்களுடைய மொபைலை பிடிங்கிக் கொண்டு வந்துட்டாங்க, இங்கிருந்து ஓடுங்கடா என்று சொன்னார்கள். அப்போது சபரீர் மோட்டுவை இரும்பு ராடால் பின் மண்டையில் தாக்கினார். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ராடு தான் அது.( ஏற்கெனவே சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுவிட்டது) அதனால் நாங்கள் அந்த இடத்தில் இருந்து ஓடிவிட்டோம்.

மோட்டு முன்பக்கமாக கவிழ்ந்து விழுந்துவிட்டார். அஜித், வெள்ளை கலர் சட்டை போட்ட நபர் பாலாஜி, கட்டம் போட்ட சட்டை போட்ட நபர் பாபு ஆகியோர் இரும்பு ராடுகளால் மோட்டுவை மாறி மாறி தாக்கினார்கள். அதில் மோட்டு மூளை சிதறி இறந்துவிட்டார். வலது காதின் பின்புறம் வெட்டு இருந்தது. நாங்கள் ஓடிப்போய் சிறிது தூரம் தள்ளியிருந்து இந்த சம்பவத்தை பார்த்தோம். பின்பு நாங்கள் போய் சொன்னதின் பேரில் மனைவியுடன் நாங்கள் பார்த்தோம். அவர் இறந்திருந்தார். காவல் நிலையம் சென்று சம்பவத்தை தெரிவித்தோம். இது சம்பந்தமாக போலீசார் விசாரித்தார்கள். நான் நடந்ததை சொன்னேன்.

**<u>4ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மோட்டு இறந்த அன்று போலீசார் என்னை விசாரித்தார்கள். இரவு முழுதும் காவல் நிலையத்தில் வைத்து என்னை மற்றும் சூரியதேவன், சுனில், வசந்த் ஆகியோரை விசாரித்தார்கள். என்னை போலீசார் ஒருமுறை தான் விசாரித்தார்கள். இறந்து போன மோட்டு லாரி ஓட்டுவார். சேஸ் வண்டியும் ஓட்டுவார். அவர் எனக்கு தெரிந்தவர். சம்பவ இடத்தில் நாங்கள் ஒரு பத்து நிமிடம் இருந்திருப்போம். அந்த நேரத்தில் நாங்கள் மது அருந்திவிட்டோம். கத்தியை எடுத்து பூபாலம் மறட்டியவுடன் நாங்கள் ஓடிவிட்டோம். அதற்கு பின் கொஞ்சம் தூரம் முன்னால் ஓடிவிட்டு நடந்த சம்பவத்தை பார்த்தோம். அவ்வாறு பார்க்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் இறந்த மோட்டுவின் நண்பர்கள் அவரை நான் பார்த்திருக்கிறேன். ஆவடி ஆட்டோ ஸ்டாண்டில் பார்த்திருக்கிறேன். நான் தான் சென்று மோட்டுவின் மனைவியை அழைத்து வந்தேன். மோட்டுவின் மனைவி வீட்டில் தான் இருந்தார். அவர் அன்றைய தினம் வேலைக்கு சென்றிருந்தார் என்றாலும் நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நாங்கள் சிறிது தூரம் ஓடிச் சென்று நடந்த சம்பவத்தை பார்த்தோம் என்றாலும் சான்று பொருட்களை அடையாளம் காட்டியது குறித்தும் மோட்டு என்னுடைய நண்பர் என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த

போது அதை தடுக்க உதவிக்கு யாரையும் அழைக்கவில்லை. நான் தடுக்க முயற்சி செய்யவில்லை. மோட்டுவிற்கு மூளை சிதறி இறந்துவிட்டார். அதனால் சிகிச்சைக்கு கூட்டி செல்லவில்லை. சம்பவத்தன்று நாங்கள் சம்பவ இடத்தில் இல்லாததாலும் இறந்த நபரின் நண்பர்கள் என்பதாலும் காவல் நிலையத்தில் எங்களை வைத்து விசாரணை செய்து பொய் வழக்கு போட்டுவிடுவோம் என்று சொன்னதின் பேரில் பார்க்காத ஒரு சம்பவத்தை போலீசார் கேட்டுக் கொண்டதின் பேரில் பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வெள்ளை சட்டை போட்ட நபர் எனக்கு தெரியாது என்றால் அவர் கரையான்சாவடியை சேர்ந்த நபர் ஆவார். அவர் பெயர் பாலாஜி. ஆனால் இந்த விவரம் எனக்கு போலீசார் சொன்னார் என்றால் சரியல்ல. போலீசார் சொல்லி கொடுத்து தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>5ஆம் எதிரி தரப்பில் குறக்கு விசாரணை</u>**

இறந்து போன மோட்டு குறித்து தனிப்பட்ட விவரங்கள் எனக்கு எதுவும் தெரியாது. எதிரிகளை பற்றி தனிப்பட்ட விவரம் எனக்கு எதுவும் தெரியாது. 5ஆம் எதிரி பாபுவை பற்றி தனிப்பட்ட விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. என்னை போலீசார் ஒருமுறை மட்டும் விசாரித்தார்கள். நான் மோட்டுவை அடித்தவுடன் உடனடியாக அவர் மனைவியை கூப்பிட நான் ஓடிவிட்டேன் போலீஸ் விசாரணையில் சொல்லியிருக்கவில்லை. சம்பவ சமயம் மது போதையில் இருந்தோம். அதனால் தான் எதிரிகள் எவ்வாறு வந்தார்கள் என்று நான் மாறி மாறி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இறந்த மோட்டுவின் செல் போன் நம்பர் தெரியாது. மோட்டு போன் பண்ணியதாக போனேன் என்று போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் எதிரிகளை காவல் நிலையத்தில் பார்க்கவில்லை. அவர்களை கைது செய்த விவரம் எனக்கு தெரியாது. எதிரிகளை தற்போது நீதிமன்றத்தில் தான் பார்க்கிறேன். இந்த வழக்கில்

யார் யார் ஈடுபட்டார் என்ற விவரத்தை பேப்பரில் பார்த்து தெரிந்து கொண்டேன். அதற்கு முன்பு அவர்களை போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். அவர்களை கைது செய்த விவரம் எனக்கு தெரியாது. நாங்கள் சம்பவத்தன்று எதிரிகளை போலீசில் அடையாளம் சொல்லியிருந்தால் அன்றைய தினமே போலீசார் அவர்களை கைது செய்திருப்பார்கள் என்றாலும் அவர்கள் சம்பவத்தில் ஈடுபடாததால் தான் இவ்வழக்கில் அவர்களை தவறாக எதிரிகளாக காண்பிக்கப்பட்டுள்ளார்கள் என்றால் சம்பவ அன்றே எதிரிகளை குறித்து நான் போலீசில் சொல்லியுள்ளேன். நான் மது போதையில் இருந்ததால் தான் எவ்வளவு துாரம் ஓடிச்சென்று சம்பவத்தை பார்த்தேன் என்று என்னால் சொல்ல இயலவில்லை என்றால் சரிதான். அதே தேதியில் போலீசார் மதியம் சுமார் 2.00 மணிக்கு ராடு போன்றவற்றை சம்பவ இடத்தில் இருந்து கைப்பற்றினார்கள். சம்பவ இடத்தில் இருந்து மது அருந்திய காலி பாட்டில்கள் மற்றும் கப்புகளை கைப்பற்றவில்லை. இறந்து போன மோட்டுவின் மனைவியுடன் மதியம் சுமார் 4.00 அல்லது 5.00 மணியிருக்கும். நான் காவல் நிலையம் சென்றேன். சம்பவம் நடந்த நேரத்திற்கும் மோட்டுவின் மனைவியுடன் காவல் நிலையம் செல்வதற்கு முன்வரை இடைப்பட்ட நேரத்தில் எங்கிருந்தேன் என்று போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. சம்பவ இடத்தில் சம்பவம் நடந்த நேரத்தில் நான் இல்லை என்றாலும் மது போதையில் வேறொரு இடத்தில் மயங்கி விழுந்துகிடந்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னை இவ்வழக்கில் சேர்த்துவிடுவார்கள் என்று அஞ்சி பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 5ஆம் ஆஜர் எதிரிக்கு வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

எதிரி 1,2,3 மற்றும் 6 தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லாததாலும் மேற்படி எதிரிகள் தங்கள் வழக்கறிஞர் வேறொருவரை பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லியதின் பேரிலும் அவர் தரப்பில் குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படவில்லை.